## சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்) திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்

## MCOP .No. 150/2021

**நாள் : 17.03.2025**

**எ.ம.சா.** 1 (இரண்டாம் எதிர்மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு . மூவேந்திரன் | மாவட்டம் | : | |
| தந்தை பெயர் | : | திரு. மனோகரன் | வயது | : | |
| ஊர் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | தேசியம் | : | |

**முதல் விசாரணை**

**1.** இவ்வழக்கில் அழைப்பாணை சார்பு செய்யப்பட்டுள்ளது. நான் திருப்பத்தூர் கிராமிய காவல் நிலையத்தில் முதல் நிலை காவலர் எண் 414 ஆக பணி புரிந்து வருகிறேன். அழைப்பாணையில் கண்டுள்ள குற்ற எண் 40/2021 திருப்பத்தூர் கிராமிய காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கை கருணாகரன் மகன் அலெக்ஸான்டர் கொடுத்த தகவலின் படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அலெக்ஸான்டர் கொடுத்த எழுத்து மூலமாக கொடுத்த புகாரில் தன் தந்தை கருணாகரன் மற்றும் தாயார் மஞ்சுளா இருவரும் இருசக்கர வாகனத்தில் சென்றதாகவும், கருணாகரன் வாகனத்தை ஓட்டியதாகவும், மஞ்சுளா பின்னால் அமர்ந்து சென்றதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. மேற்கண்ட இருசக்கர வாகனத்தின் பதிவெண் TN 83 M 8273 ஹீரோ ஸ்பெளண்டர். தருமபுரி–கிருஷ்ணகிரி கூட்ரோடு அருகில் சென்று கொண்டிருந்த போது தன் அப்பா ஓட்டி சென்ற வாகனத்தின் பின்னால் வந்து கொண்டிருந்த TN 48 K 7376 பதிவெண் கொண்ட டிப்பர் லாரி தன் அப்பா ஓட்டி சென்ற வாகனத்தின் மீது மோதியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அப்போது நேரம் பிற்பகல் சுமார் 12.30 மணி குறிப்பிடப்பட்டுள்ளது. அலெக்ஸான்டர் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்பது முதல் தகவல் அறிக்கையிலிருந்து தெரிய வருகிறது. இருசக்கர வாகனத்தில் பயணித்த இருவரும் தலைக்கவசம் அணிந்து சென்றதாக அலெக்ஸான்டர் குறிப்பிடவில்லை. எங்களுக்கு சொந்தமான இருசக்கர வாகனம் என அலெக்ஸான்டர் குறிப்பிட்டதாக முதல் தகவல் அறிக்கையில் உள்ளது. 08.02.2021 அன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது.

3. இரண்டு வாகனங்கள் விபத்தில் சம்பந்தப்பட்டுள்ளதாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. புலன் விசாரணை அதிகாரி புலன் விசாரணை செய்து மாதிரி வரைபடம் தயாரித்துள்ளார். மேற்கண்ட மாதிரி வரைபடம் பார்வை மகசரில் உண்மை நகல்களை தாக்கல் செய்கிறேன். அது எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. விபத்து நடந்த இடம் சாலையின் மையப்பகுதி என்றால் சரிதான். விபத்து நடந்த இடம் சாலையின் இடதுபுறமாக நடைபெறவில்லை. திருப்பத்தூரிலிருந்து கிருஷ்ணகிரி செல்லும் சாலையில் நடுவில் லைன் உள்ளது என்றால் சரிதான். அதேபோல் கிருஷ்ணகிரிலிருந்து திருப்பத்தூர் வரும் சாலையிலும் நடுவில் லைன் உள்ளது. திருப்பத்தூரிலிருந்து கிருஷ்ணகிரி செல்லும் சாலையின் வலதுபுறமாக தான் விபத்து நடந்துள்ளது.

4. சம்பவ இடத்தை பார்வையிட்டு தான் மாதிரி வரைப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததும், மாதிரி வரைப்படம் தயாரித்ததும் உதவி காவல் ஆய்வாளர் திருமிகு. A. ராணி. இடதுபுற லைனில் இருசக்கர வாகனம் சென்றிருந்தால் விபத்து நடந்திருக்க வாய்ப்பில்லை. வரைப்படத்தின் படி, விபத்து நடந்த இடத்தில் கடைகள் ஏதும் இல்லை. சாலையில் மண்சாலை பகுதியில் விபத்து ஏதும் நடக்கவில்லை. விபத்தில் சம்பந்தப்பட்ட இரண்டு வாகனங்களும் மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்விற்கு அனுப்பப்பட்டது.

5. TN 83 M 8273 பதிவெண் கொண்ட இருசக்கர வாகனம் 01.08.2024 அன்று ஆய்வு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆய்வறிக்கையின் உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். அது எ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. விபத்து நடந்த தேதி 08.02.2021 என்ற நிலையில் காலதாமதமாக ஆய்விற்கு அனுப்பப்பட்டது ஏன் என்றால் வாகனத்தை தலைமறைவாக வைத்திருந்ததால் உடனடியாக ஆஜர்படுத்த முடியவில்லை. மோட்டார் வாகன ஆய்வாளர் தன்னுடை ஆய்வறிக்கையில் மேற்கண்ட இருசக்கர வாகனத்தின் ஓட்டுநர் மற்றும் உரிமையாளர் கருணாகரன் மகன் அலெக்ஸான்டர் என குறிப்பிட்டுள்ளார். அது ஓட்டுநர் உரிமம் ஒப்படைக்கவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கையின் படி வாகனத்தை ஓட்டியது கருணாகரன். சோழமண்டலம் ஜென்ரல் இன்சூரன்ஸ் கம்பெனியில் மேற்கண்ட வாகனம் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. 29.01.2026 வரை காப்பீடு செய்யப்பட்டுள்ளது.

6. விபத்தில் சம்பந்தப்பட்ட TN 48 K 7376 பதிவெண் கொண்ட டிப்பர் லாரி 15.02.2021 அன்று மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்விற்காக அனுப்பப்பட்டது. அந்த ஆய்வறிக்கையின் உண்மை நகலை தாக்கல் செய்கிறேன். அது எ.ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்கண்ட ஆவணத்தின் லாரியின் உரிமையாளர் பெயர் ராஜா மகன் தேவன் என குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த வாகனத்தின் ஓட்டுநர் ராஜா மகன் தேவன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. லாரி நேஷனல் இன்சூரன்ஸ் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது.

7. தலைமறைவாக இருந்த TN 83 M 8273 பதிவெண் கொண்ட இருசக்கர வாகனம் எங்களால் கைப்பற்றப்பட்டதா என்றால் இல்லை. மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்விற்காக ஆஜர்படுத்தும் படி கேட்கப்பட்டால் ஆஜர்படுத்தப்பட்டது. விபத்து நடந்த 08.02.2021 முதல் சுமார் 4 ஆண்டுகளாக மேற்கண்ட வாகனம் ஒப்படைக்கப்படாமல் 01.08.2024 அன்று தான் ஆஜர்படுத்தப்பட்டது. விபத்து சம்பந்தமாக புகார் கொடுத்த அலெக்ஸான்டர் தான் மேற்கண்ட வாகனத்தின் உரிமையாளர். அலெக்ஸான்டர் தனக்கு சொந்தமான வாகனம் என்பதாலும், தன்னுடைய தகப்பனாருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதாலும் வாகனத்தை மறைத்து வைத்துள்ளார் என்றால் இருக்கலாம். மேற்கண்ட இருசக்கர வாகனம் கருணாகரனுக்கு சொந்தமானது இல்லை. அவருக்கு ஓட்டுநர் உரிமமும் இல்லை.

8. சாலை விதிகளை பின்பற்றி இருசக்கர வாகனத்தை ஓட்டி இருந்தால் விபத்து நடந்திருக்காது. முதல் தகவல் அறிக்கையில் சிக்னல் காண்பித்ததாக ஏதும் இல்லை. இவ்வழக்கில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்படவில்லை.

**இரண்டு மற்றும் மூன்று மனுதாரர்கள் தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை இல்லை என முடிக்கப்படுகிறது.**

ஒம்/. V.L. சந்தோஷ்,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.